
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 16 டிசம்பர்



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

தமிழ்நாடு. இந்தியா

☎04257-230030, 230382. Cell : 98427 - 30382

E-mail : kangayamcofc@eth.net




## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 1 |
| 2. | எக்லீசியா வேதாகமக் கல்லூரி . . . | 10 |
| 3. | சுவிஷேசத்தின் ஆசீர்வாதங்கள் | 11 |
| 4. | பெண்கள் பகுதி | 16 |
| 5. | வாலிபர் பகுதி | 20 |
| 6. | சிறுவர் பகுதி | 23 |
| 7. | தேவனுடைய பரிசுத்த .... | 25 |
| 8. | நீதியான நியாயத்தீர்ப்பு | 29 |

# THIRUMARAI AASAAN
**Published by Church of Christ**

Editor
**S. Rajanayagam**

Honorary Editor
**J.C. Choate**

Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol.16 December - 2003 Issue-12

***ஆசிரியர் உரை***

# "நீ உனக்குக் கெடுதி ஒன்றும் செய்து கொள்ளாதே"

**வ**ருடத்தின் கடைசி மாதம் துவங்கி விட்டாலே, உலகெங்குமுள்ள, கிறிஸ்தவ சமுதாயத்திற்கு ஒரே கொண்டாட்டம்தான். ஒருவிதமான பரபரப்பும், விறுவிறுப்பும் வயது பேதமின்றி எல்லோரையும் பற்றிக்கொள்ளும். ஆம், என்ன செய்யலாம் என்ற பேச்சும், எப்படிச் செய்யலாம் என்ற திட்டமும், செய்தே ஆகவேண்டும் என்ற வேகமும், செய்ய விடவே கூடாது என்ற வைராக்கியமும் மேலோங்கி நிற்கும். அது போக, ஆட்டம்பாட்டத்திற்கான ஆயத்த வேலைகளும், ஒத்திகைகளும் ஆங்காங்கே நடக்கத் துவங்கும். சொல்லப்போனால், கொண்டாட்டத்தைப் பொறுத்தளவில் நாங்கள் எந்த மதத்தவருக்கும் சளைத்தவர்களல்ல என்பதைக் காட்டிக்கொள்ள **கிறிஸ்தவம்** படாதபாடுபடும். இன்னும், இந்த இறுதி மாதத்தில் பக்திக்கும் கூட பெரிதாகப் பஞ்சமிருக்காது. வழக்கத்தைவிடக் கொஞ்சம் கூடுதலான டிகிரியிலேயே அதுவும் இருக்கும். இவைகள் போதாதென்று வாழ்த்துப் பரிமாற்றம் என்ற பெயரில் வாழ்த்து அட்டைகள் வேறு அங்குமிங்கும் அலைமோதி தபால் துறையையே ஸ்தம்பிக்கச் செய்யும்.

இத்தனைக்கும் மத்தியில், மார்க்க ரீதியிலான சில சிந்தனைகளுக்கும் குறைவிருக்காது. இந்த ஆண்டு எப்படியோ போகட்டும், இனிவரும் ஆண்டில் நான் அப்படி இருப்பேன், இப்படி இருப்பேன் என்ற தீர்மானங்களும் பலரால் எடுக்கப்படும். ஆம் புத்தாண்டிலிருந்து காலை, மாலை ஜெபம் இத்தனை மணி, வேதவாசிப்பு குறைந்தது இவ்வளவு நேரம், வாரம் தவறாமல் ஆராதனை மற்றும் இந்தப் பழக்கத்திற்கு

இவ்வருடத்தோடு விடை. புதிய வருடத்தில் அதைத் தொடவே மாட்டேன். அங்கு போகவேமாட்டேன் என்பது போன்ற முடிவுகள் முழுவீச்சில் முடிவு செய்யப்படும். ஆனால், பெரும்பாலான இத்தீர்மானங்கள் தக்கிமுக்கி இரண்டு அல்லது மூன்று வாரங்கள் வரை எப்படியோ நீடித்து, பிறகு தடயமே தெரியாத அளவுக்கு மாயமாய் மறைந்து போகும் என்பது வேறு விஷயம்.

ஒட்டுமொத்த உணர்வுகள் இப்படி வித்தியாசமானதாகவும், உச்ச ஸ்தாதியிலுமிருக்கும்போது, திருமறை ஆசானும் உங்களை வாயார மாத்திரமல்ல, நெஞ்சார வாழ்த்தவே விரும்புகிறது. ஆயினும் **அது சத்தற்றதாகவும், சத்தியமற்றதாகவும் இராமல் சத்தும், சத்தியமும் கொண்டதாக அமைந்து, ஓராண்டுக்கு மாத்திரம் பயன்தராமல் நித்திய காலமெல்லாம் உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்க வேண்டுமென்றே விரும்புகிறது.** இம்மைக்கும், மறுமைக்கும் அது ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும் தரவேண்டுமென்று ஆசைப்படுகிறது. இவ்வாசையை அடிப்படையாகக் கொண்டுதான், இவ்வருடக் கடைசிக்கான உரையும் உங்களுக்காக அமைக்கப்பட்டிருக்கிறது.

**"நீ உனக்குக் கெடுதி ஒன்றும் செய்து கொள்ளாதே"** என்ற இத்தலைப்பைப் பார்த்த மாத்திரத்தில், வருட இறுதிக்குப் பொருத்தமாக இல்லையே என்று முகம் சுளிக்க வைத்தாலும், இதனுள்ளே செல்லும் போது உங்கள் முகநாடி சீர்படும் என்று நம்புகிறேன்.

கெடுதி அல்லது தீமை என்பது ஒருவராலும் விரும்பப்படத்தக்கதல்ல. ஆனால், நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அது நமக்கு நேருவதை நாம் தவிர்க்கவோ அல்லது தடுக்கவோ முடியாது. எனக்குக் கெடுதி வந்ததே கிடையாது, தீமை என்பது என் வாழ்வில் நடந்ததே இல்லையென்று நாம் யாருமே சொல்ல முடியாது. ஆயினும், நாம் சந்தித்த அல்லது சந்திக்கின்ற கெடுதி, தீமை ஆகியவை மிகப்பெரும்பாலும் நம்மால் நமக்கு வந்து சேருவதில்லை. மற்றவர்களாலேயே பெரும்பாலும் தானமாகத் தரப்படுகிறது. எப்படியெனில், நல்ல உணர்வுள்ளவர்கள் யாரும் தங்களுக்குத் தாங்களே கெடுதி செய்து கொள்ளமாட்டார்கள். ஒருவேளை அப்படி யாராவது செய்தால், அவர்களைப் பயித்தியகாரர்கள் பட்டியலிலோ அல்லது குடிகாரர்கள் கூட்டத்திலோ தாராளமாகச் சேர்த்து விடலாம். இப்படிப்பட்டவர்களே தாங்கள் என்ன செய்கிறோம் என்பது தெரியாமல் தாங்கள் செய்கின்ற தீமையின் விளைவு புரியாமல் தங்களுக்குத் தாங்களே கெடுதி செய்து கொள்ளுவார்கள்.

ஆனால், இங்கேயோ மிகவும் வித்தியாசமாக, சொஸ்த புத்தியும், கடமையுணர்வுமிக்க ஓர் அதிகாரி, தான் என்ன செய்கிறோம் என்பது புரிந்தே, செய்கின்ற காரியத்தின் முடிவு எப்படியிருக்குமென்று புரிந்தே, தனக்குத்தானே கெடுதி செய்துகொள்ள முற்படுகின்றான். அப்பொழுதுதான் அந்த பிரபல அப்போஸ்தலன், தனக்குக் கெடுதி செய்து கொள்ளத் துணிந்த அந்த மனிதனைப் பார்த்து, **"நீ உனக்குக் கெடுதி ஒன்றும் செய்துகொள்ளாதே"** என்று மிகுந்த சத்தமிட்டுக் கூறுகிறான். (அப் 16 : 28)

இப்பொழுது இத்தலைப்பினூடே சென்று நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று பார்ப்பதற்கு முன்பாக, நமது வழக்கப்படி இதன் பின்னணி பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ள முயற்சிப்போம்.

அப்போஸ்தலன் பவுலடியாரின் மூன்று நற்செய்திப் பயணங்களில் இரண்டாவது பயணத்தின் போதுதான் இச்சம்பவம் நடந்துள்ளது. நித்திய வாழ்வுக்கு அநேகரை வழிநடத்தின இப்பயணம், சிரியா அந்தியோகியாவில் ஆரம்பித்து, தர்சு, தெர்பை, லீஸ்திரா, இக்கோனியா, பிசிதியா அந்தியோகியா, துரோவா மற்றும் நெயோப்போலி வழியாக மக்கெதோனியா தேசத்து நாடுகளில் ஒன்றிற்குத் தலைமையானதும், ரோமர் குடியேறினதுமான பிலிப்பு பட்டணத்திற்கு வந்து சேருகிறது. அங்கேதான் தியத்தீரா ஊராளும், இரத்தாம்பரம் விற்கிறவளுமாகிய லீதியாளையும், அவளுடன் ஆற்றோரத்தில் வழக்கமாய்க் கூடி வந்த ஸ்திரீகளோடும் சந்திப்பு நடைபெறுகிறது. (16 : 13) அவர்களுக்கு கிறிஸ்துவின் நற்செய்தியை உபதேசித்த போது, இருதயத்தை திறந்து அவைகளை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுத்து இரட்சிக்கப்படுகிறார்கள் (வ. 15) ஒருவகையில் ஐரோப்பிய ஊழியத்திற்குத் "தாயம்" போட்டவர்கள் என்று லீதியாளையும், அவளோடிருந்தவர்களையும் நாம் கூறினாலும் தவறில்லை.

இப்படிக் கிறிஸ்துவுக்குள்ளாகப் பிறந்த அந்தக் குழந்தைகள், தங்களுடைய அன்பையும், நன்றியையும், அத்தேவமனிதர்களுக்கு பெண்களுக்கே உரித்தான விருந்தோமல் மூலம் தெரிவிக்கும்படியாய், அவர்களனைவரின் சார்பாக, என் வீட்டிலே தங்கவேண்டும் என்று லீதியாள் வருந்திக் கேட்கிறாள் (வ 15) பச்சிளம் கிறிஸ்தவர்களின் அன்பான வேண்டுகோளைத் தட்டிக் கழிக்க முடியாமல் ஏற்றுக் கொள்ளுகிறார்கள் பவுலும், சீலாவும். நம்முடைய சம்பவத்திற்கான திருப்புமுனை இதுதான். ஆம், அங்கே குறிசொல்லுகிற ஆவியைக் கொண்டிருந்து, குறி சொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த

ஆதாயத்தை உண்டாக்கிக் கொண்டிருந்த ஒரு பெண் "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர்" "இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்" என்று ஓயாமல் சொல்லி பவுலை வெறுப்பேற்றுகிறாள். பொறுமையிழந்த பவுல், "நீ இவளைவிட்டுப் புறப்பட்டுப் போ என்று, இயேசுவின் நாமத்தினால் கட்டளை கொடுத்து, உடனடியாகப் புறப்பட்டுப் போகும்படி செய்தான். (அப். 16 : 16-18)

அப்பொழுது அந்தப் பெண்ணின் எஜமான்கள் தங்கள் **ஆதாயத்து நம்பிக்கை அற்றுப் போயிற்றென்று கண்டு,** பவுலையும், சீலாவையும் பிடித்து சந்தை வெளிகளிலுள்ள அதிகாரிகளிடத்திற்கு அழைத்து வந்து, உண்மையின் வாசனையே படாத குற்றச்சாட்டுக்களை எந்தவித் குறுக்கீடில்லாமல் சுகமாக சுமத்தினர். அதிகாரிகளோ, நடந்தது என்னவென்று விசாரிக்காமல், தங்கள் பொறுப்புக்குச் சற்றும் சம்பந்தமில்லாமல் தரம் தாழ்ந்து நடந்து, அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்து, அடிக்கச் சொல்லியதோடு பத்திரமாய்க் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்கும் கட்டளை கொடுத்தார்கள். பொய்க் குற்றச்சாட்டுக்கு ஆளாகி, அடி உதைபட்டு, கால்கள் தொழுமரத்தில் மாட்டப்பட்டு, உட்காவலறையில் அடைக்கப்பட்டபோது அவர்கள் மனநிலை எப்படியிருந்திருக்குமென்று எண்ணிப்பாருங்கள். ஐயகோ !

நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம்? மயங்கி சுருண்டு படுத்து, நம்மை நாமே நொந்து, சுவிஷேசத்தினிமித்தமாக எடுத்த முடிவையும், கிறிஸ்துவின் நிமித்தம் பெற்ற நம்பிக்கையையும் குறித்து மறுபரிசீலனை செய்ய ஆரம்பித்து, தப்பிக்கும் வழி என்ன என்று சிந்திக்கத் தொடங்கியிருப்போம். அப்படித்தானே! ஆனால் இவர்களோ, தேவனைத் துதித்துப் பாடுகிறார்கள். எப்படித்தான் அவர்களால் அப்படிச் செய்ய முடிந்ததோ? என்ன அருமையான விசுவாசம்! எவ்வளவு ஆழமான பக்தி !! நாமும் தான் பக்தியின் வேடமணிந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எப்போதுதான் இவர்களைப் போன்ற விசுவாசத்தைப் பெற்றுக் கொள்ளப் போகிறோமோ தெரியவில்லை.

பவுலும் சீலாவும் பாடினபோது சடுதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாகப் பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது. எல்லோருடைய கட்டுகளும் கழன்று போயிற்று தேவனைத் துதித்துப் பாடும் போது எழுந்திராத இந்தக் கும்பகர்ண சிறைச்சாலைக்காரன், பூமி அதிர்ந்தபோது, நித்திரை தெளிந்தவனாய், சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்களென்று எண்ணி, பட்டயத்தை உருவி

தன்னை கொலைசெய்து கொள்ளப்போனான். கம்பியை நீட்டி ஓட்டம் பிடிக்கும் கைதிகள் கதவுகள் திறந்திருந்தால், அதுவும் இராத்திரியில் திறந்து கிடந்தால் சும்மா இருப்பார்களா? நம்முடைய கணக்குப்படி, எல்லா கைதிகளுமே அம்பேல்தான். ரோமச் சட்டத்தின்படி தன்வசம் ஒப்புவிக்கப்பட்ட கைதிகள் தப்பித்துப்போனால், தப்பிபோன கைதிக்கு என்ன தண்டனை கிடைக்குமோ அந்தத் தண்டனையோ அல்லது மரண தண்டனையோ அந்த சிறைச்சாலைக்காரனுக்குக் கொடுக்கப்படும். அதற்கு முன்பாக, விசாரணை என்ற பெயரில் சித்திரவதையும் கூடச் சேர்ந்துக் கொள்ளும். இதற்குப் பயந்து, பல சந்தர்ப்பங்களில், எப்படியும் தப்பிக்கப் போவதில்லையென்று அறிந்து, தாங்களாகவே முன்வந்து தற்கொலை செய்து கொள்வார்கள். இந்த சிறைச்சாலைக்காரனும் அதைத்தான் செய்ய எத்தனித்தான். அப்பொழுது தான் பவுல் மிகுந்த சத்தமிட்டு **"நீ உனக்குக் கெடுதி ஒன்றும் செய்து கொள்ளாதே"** நாங்கள் எல்லாரும் இங்கே தான் இருக்கிறோம்" என்றான்.

இந்த சிறைச்சாலைக்காரன் போல இன்றைக்கும் அநேகர் தங்களுக்குக் கெடுதி செய்து கொள்ளுகிறவர்களாகவே இருக்கிறார்கள். யாரெல்லாம் தங்களுக்கு எப்படி கெடுதி செய்து கொள்ளுகிறார்கள் என்று இங்கே பார்ப்போம்.

**I. பாவத்திலே வாழ்ந்து சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்கள்**

பாவம் ஆதியிலே ஏவாள் மூலமாக பூமியிலே பிரவேசித்ததென்பதை நாம் அறிவோம் ( ஆதி. 3 : 13 ) அதுமுதல், தொடர்ந்து பூமியிலே பாவம் கோரத்தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறது. எப்படியெனில், "எல்லாரும் வழிதப்பி ஏகமாய்க் கெட்டுப்போனார்கள், நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை" (ரோம 3 : 12) என்றும், எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள் (ரோம 3 : 23) என்றும் வேதம் திட்டவட்டமாக எடுத்துரைக்கிறது. இதன்படி நன்மை தீமை அறியத்தக்க பருவம் அடைந்த அனைவரும் பாவிகளாகவே இருக்கிறார்கள். இப்படி எல்லோரையும் ஏகமாய்க் கட்டிப்போட்டிருக்கும் பாவத்தின் தன்மை பயங்கரமானதாயிருக்கிறது. இதுபற்றி ஏசாயா தீர்க்கன் பாவம் தன்னைப் படைத்த **தேவனிடத்திலிருந்து மனிதனை பிரிக்கிறது** என்கிறார். (ஏசாயா 59 : 12) யோவான் நற்செய்தியாளர், சுதந்திரமாயிருக்கும்படியாகப் படைக்கப்பட்ட **மனிதனைப் பாவம் அடிமையாக்குகிறது** என்கிறார். (யோவான் 8 : 34) இன்னும் அப்போஸ்தலன் பவுல் கூறும்போது, **பாவம் நித்திய மரணத்தை வருவிக்கிறது** என்று (ரோமர் 6 : 23) பயமுறுத்தி எச்சரிக்கிறார்.

இப்படிப் பாவத்திலே வாழ்ந்து நித்திய ஆக்கினைக்குத் தன்னை ஆளாக்கிக் கொண்டிருக்கும் மனிதனை இரட்சித்து, அவனுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும்படியாக பரலோகத் தகப்பன் தன்னுடைய ஒரே பேரான குமாரனை பூமிக்கு அனுப்பினார். (யோ. 3 : 16) அப்போஸ்தலன் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் . . . " என்று சொல்லுகிறார் (I தீமோ. 1 : 15) பாவிகளை இரட்சிக்க வந்த இயேசுவானவர் நமது பாவங்களுக்காக முதலில் மரித்தார். (I கொரி. 15 : 3). அந்தக் கல்வாரிச் சிலுவையில் அவர் சிந்தின இரத்தம், ஒவ்வொரு மனிதனுடைய பாவத்தையும் நீக்கிச் சுத்திகரிக்கும் வல்லமை கொண்டதாக இருக்கிறது. ( I யோவா. 1 : 7).

சிலுவைநாதரின் சுவிஷேசத்தை ஒருவன் கேட்டு, அதற்குத் தன்னைக் கீழ்ப்படுத்துவதன் மூலம் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பை ஒருவன் பெற்றுக் கொள்ளுகிறான். ஏனெனில் சுவிசேஷம் இரட்சிப்புண்டாவதற்குத் தேவ பெலனாயிருக்கிறது. (ரோம 1 : 16) இந்த சுவிஷேசத்தைத் தான் இயேசுவானவர் **"உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் பிரசங்கியுங்கள், விசுவாசமுள்ளவானகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்"** என்று கட்டளையாகக் கொடுத்துள்ளார் (மாற். 16 : 15, 16). இந்த சுவிஷேசம் முதல் நூற்றாண்டிலேயே பூமியின் கடைசி பரியந்தமும் எடுத்துச் செல்லப்பட்டாயிற்று (கொலோ 1 : 23) இன்றும் அது உலகெங்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது.

அருமையானவர்களே, தேவ பெலனாக இருந்து இரட்சிக்கும் வல்லமை பெற்ற இந்த சுவிஷேசத்திற்குத் தங்களைக் கீழ்ப்படுத்தாமல் வாழ்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் தங்களுக்கு தாங்களே கெடுதி செய்கிறவர்களாகவே இருக்கிறார்கள். வருடத்தின் இறுதி நாட்களிலே நின்று கொண்டு இதை வாசித்துக் கொண்டிருக்கிறவர்களே நீங்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறீர்கள் என்று எண்ணிப் பாருங்கள். முடிவெடுக்க இதுவே சரியான தருணம்.

## II. அனலும், குளிருமற்ற கிறிஸ்தவர்கள் :

இரண்டாவதாக கிறிஸ்துவின் நற்செய்தியை அறிந்து அதற்குத் தங்களைக் கீழ்ப்படுத்தியும் சத்திய வசனங்களின் வழிகாட்டுதல்படி மெய்யான கிறிஸ்தவ வாழ்க்கை வாழாத ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கெடுதி செய்கிறவர்களாகவே இருக்கிறார்கள்.

விசுவாசித்து, மனந்திரும்பி, இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று தண்ணீரில் முழுகி

ஞானஸ்நானம் பெறுவது ஒருவன் செய்கின்ற மிகச் சிறந்த காரியம். இது பூமியிலே பிறந்து வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் செய்ய வேண்டிய இன்றியமையாத ஒன்று. ஆனால், அதே நேரத்தில் தன்னுடைய கீழ்ப்படிதலை வாழ்நாளின் இறுதிவரை காத்துக் கொள்வது முக்கியமானது. இந்த உண்மையை நமதாண்டவர் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். **"முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்"** என்று (மத். 10 : 22, மாற்கு 13 : 13) ஒருவன் எப்படிக் கிறிஸ்தவனாக மாறவேண்டுமென்பதை ஒரே ஒரு புத்தகத்தில் (அப்போஸ்தலர் நடபடிகள்) வெளிப்படுத்தியுள்ள பரலோக தேவன், ஒருவன் எப்படிக் கிறிஸ்தவனாக வாழவேண்டுமென்பதற்கு இருபத்தொரு புத்தகங்களை ஒதுக்கியுள்ளார். (ரோம - யூதா) ஒருவன் கிறிஸ்தவனாக வாழ்வது எவ்வளவு அத்தியாவசியமானது என்பதற்கு இதைவிடச் சிறந்த சான்று வேறு என்ன வேண்டும்?

அப்படியானால், இன்றைக்கு அநேகருடைய வாழ்க்கை எப்படியிருக்கிறது? உன்னிப்பாக கவனித்தால் அது பழைய ஏற்பாட்டு ராஜாக்களின் நாட்களை நமக்கு நினைவுபடுத்துகிறதாகவே உள்ளது. அங்கே தேவனுடைய ஜனம், கர்த்தருக்குப் பயந்தும், தங்கள் விக்கிரகங்களைச் சேவித்தும் வந்தார்கள் என்று வசனம் கூறுகிறது. ( II ராஜா 17 : 41) கர்த்தருக்குப் பயப்படுகின்ற காரியத்தில் அவர்கள் குறைவைக்கவில்லை, உண்மைதான். அதே நேரத்தில், விக்கிரகங்களைச் சேவிப்பதிலும் சளைக்கவில்லையே, இது எப்படி நியாயமாகும்? இன்றைய கிறிஸ்தவர்களை இந்த வசனம், நமது நாட்களிலுள்ள கிறிஸ்தவத்தின் நாடித்துடிப்பை அப்படியே பிரதிபலிப்பதாக உள்ளது. ஆம், பாடல், ஜெபம், வேதவாசிப்பு, ஆராதனை போன்ற பக்தி சம்மந்தப்பட்ட காரியங்களுக்கு குறைவில்லை. அதே சமயத்தில், உலக ஆசாபாசங்களையும் விட்டு வைப்பதில்லை. அதுவும் வேண்டும் , இதுவும் வேண்டும் என்ற அவல நிலையே நீடிக்கிறது.

முதல் நூற்றாண்டுக் காலத்தில் லவோதிக்கேயா சபையாரின் நிலையும் இப்படித்தான் இருந்தது. அப்படிப்பட்டவர்களை, இயேசுவானவர் என்ன செய்கிறேன் என்று சொல்லுகிறார் பாருங்கள் "இப்படி நீ குளிருமின்றி, அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியால் உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப் போடுவேன். (வெளி 3 : 16) வாந்தி பண்ணிப் போடப்படும் நிலை நமக்குப் பரலோகத்தைப் பெற்றுத் தராது. மாறாக, நரகமே நம்முடைய நித்தியமாக வாசஸ்தலமாக மாறிவிடும்.

ஆகையால் அருமையானவர்களே, நாம் கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொண்டு கிறிஸ்தவர்களாக வாழாமல் நமக்குக் கெடுதி

செய்கிறவர்களாக இருக்க வேண்டாம். இந்த நாட்களில், நம்மை நாமே சீர் தூக்கிப் பார்த்து செய்ய வேண்டியதைச் செய்வோம்.

## III பரலோகத்திற்குத் தங்களை ஆயத்தப்படுத்தாவர்கள்

மூன்றாவதாக, பரலோக வாழ்வை எதிர்பார்த்து, அதற்காகத் தங்களை ஆயத்தம் செய்யாதவர்கள், ஒருவகையில் தங்களுக்கு தாங்களே கெடுதி செய்து கொள்ளுகிறவர்களாகவே இருக்கிறார்கள்.

இந்த பூமிக்குண்டான வாழ்வு எந்த ஒரு மனிதனுக்கும் சதமானதல்ல. ஒருவேளை, அவன் எவ்வளவு பெரிய ராஜாவாக இருந்தாலும் அல்லது செல்வாக்குமிக்க தேசத்தின் தலைவனாக இருந்தாலும் அல்லது தட்டிக் கேட்க முடியாத சர்வாதிகாரியாக இருந்தாலும் அல்லது யாருமே திரும்பிப் பார்க்க விரும்பாத சாமானியனாக இருந்தாலும் சரி இதுதான் நியதி எபிரெய ஆசிரியரைக் கொண்டு தேவன் இக்கருத்தை ஐயத்திற்கிடமின்றி வெளிப்படுத்தி விட்டார். “அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது” என்று (எபி. 9 : 27).

ஆகையால், பூமியிலே வாழ்கின்ற எல்லோருமே, ஏதாவது ஒரு நித்தியத்தை நோக்கியே பயணம் செய்து கொண்டுள்ளனர். ஒன்று, பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும், ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிற நித்திய அக்கினி. மற்றொன்று பரிசுத்தவான்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டு வருகிற நித்திய ஜீவன் (மத். 25 : 41, 46 ; ரோம 2 : 2) இரண்டுக்கும் இடைப்பட்ட நிலை என்று எதுவுமே இல்லை. அப்படியானால், இவ்விரண்டில் எந்த இடத்திற்குப் போக நாம் நம்மை ஆயத்தமாக்கிக் கொண்டுள்ளோம்? நமதாண்டவர், மனுஷன் உலகம் முழுவதும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? ” என்று கேட்டு உள்ளாரே. ஓர் ஆத்துமாவின் மேன்மையை இதைவிட விளக்கமாக எப்படி ஒருவரால் சொல்ல முடியும்?

நமதாண்டவரின் கூற்றை நான் புரிந்துகொண்டேன். நானும், பரலோகம் போகவே விரும்புகிறேன் என்று ஒருவேளை நீங்கள் சொல்லுவீர்களானால், அதற்கான ஆயத்தமும், அதுபற்றிய எதிர்பார்ப்பும் உங்களிடம் உண்டா? சொல்லுங்கள் அப்போஸ்தலன் பவுல் பிலிப்பியருக்குச் சொல்லும் போது, தன்னையும் அவர்களில் ஒருவராகச் சேர்த்துக் கொண்டு, “நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருகிறது அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர

எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்". (பிலி. 3 : 21) என்று சொல்லுவதை எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? இன்னும் அதே நிருபத்தில் "... தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு அது அதிக நன்மையாயிருக்கும் (1 : 23) என்று கூறுகிறாரே நினைவிலிருக்கிறதா? அப்படியானால், பரலோகத்திற்குச் சென்று பிதாவாகிய தேவனோடும், கிறிஸ்து ராஜாவோடும் இருக்க அவருக்கு எவ்வளவு வாஞ்சையிருந்திருக்கும் பாருங்கள். அவருக்கு ஆசை வாஞ்சை மாத்திரமல்ல, அதற்கான ஆயத்தமும் இருந்துள்ளது. ஆகவேதான், நல்ல போராட்டத்தை நடத்தியுள்ளார். (II தீமோ. 4 : 7).

ஆகையால், அருமையானவர்களே இவ்வருடத்தின் இறுதி நாட்களிலே நின்று கொண்டிருக்கும் நமக்கு, கர்த்தர் கொடுத்திருக்கும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, ஆவிக்குரிய ரீதியில் என் நிலைமை எப்படியிருக்கிறது என்று வேத வசனங்களினடிப்படையில் நிதானித்துப் பார்த்து, ஒருவேளை நமக்கு நாமே கெடுதி செய்து கொண்டிருக்கிறவர்களாக இருப்போமானால் அந்நிலையிலிருந்து விடுபட்டு, புதிய ஆண்டிலிருந்து தேவனுக்குப் பிரியமான ஒரு வாழ்க்கையை வெற்றியாய் நடத்த சகல முயற்சிகளையும் செய்வோமாக! ஆமென் !!

***அனைவருக்கும் அடியேனின் குடும்பத்தின் சார்பாக புத்தாண்டு நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.***


தமிழன் டிவியில்

**திருமறை தியானம்**

***தொலைக்காட்சி நிகழ்ச்சி***

**திருமறை ஆசான் இதழின் ஆசிரியர்**
**திருமறை தியான நிகழ்ச்சியில்**
**நற்செய்திப் பேருரை ஆற்றுகிறார்.**

நாள் : **ஒவ்வொரு புதன்கிழமையும்**
நேரம் : **காலை 6 : 30 - 6 : 45 வரை**

# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

மாணவர் சேர்க்கை அறிவிப்பு

## EKKLESIA BIBLE COLLEGE

***P.O. Box - 27, Kangayam - 638 701. India.***

**STUDENTS ADMISSION NOTIFICATION**

புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் முழு நம்பிக்கையும், நற்செய்தியை நானிலம் எங்கும் எடுத்துச் செல்ல வேண்டுமென்பதில் இணையில்லா ஈடுபாடும் கொண்ட வாலிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் உடனடியாக வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| **காலம்** | : | **3 வருடம்** (செமஸ்டர் முறை) |
| **Duration** | : | **3 Years (Semester System)** |
| **கல்வித் தகுதி** | : | **+2 தேர்ச்சி** (அல்லது) **பட்டப்படிப்பு** |
| **Qualification** | : | **+2 Pass (or) Any Degree** |
| **பட்டம்** | : | **வேதயியலில் இளங்கலை பட்டம்** |
| **Degree** | : | **B.B.S. (Bachelor of Biblical Studies)** |

**தகுதியுள்ளவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்.**

விபரங்கட்கும், விண்ணப்பங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

இயக்குநர்

**எக்லீசியா வேதாகமக் கல்லூரி,**
தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701. இந்தியா
✆ : (04257) 230030,
Cell : 98427 - 30382.

# சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்கள்

சுவிசேஷத்தின் உண்மைகளும், அதற்கான கட்டளைகளும் கொடுக்கப்பட்டிருப்பது போல அதற்கான ஆசீர்வாதங்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது. உண்மைகள் நம்புவதற்காகவும், கட்டளைகள் கீழ்படிகிறதற்காகவும், ஆசீர்வாதங்கள், சுவிசேஷத்தை விசுவாசித்து, அதற்கு கீழ்படிகிறவர்கள் பெற்றுக் கொள்ளும்படியாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார். "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் ; அவர் கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் (எபே. 1 : 3)" "ரோமாபுரியில் இருந்த சகோதரர்களுக்கு அவர் எழுதுகையில், நான் உங்களிடத்தில் வரும்போது கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதத்தோடே வருவேனென்று அறிந்திருக்கிறேன் (ரோமர் 15 : 29) என்கிறார்.

அதில், சில ஆசீர்வாதங்கள் என்ன? அநேகம் உண்டு, ஆனால் அதில் முக்கியமான சில காரியங்களைப் பட்டியலிடுகிறோம்.

**1. சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதினால் ஒருவன் பாவ மன்னிப்பை பெறுகிறான் :**

"பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள், மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் அப். 2 : 38. ஒருவன் இரட்சிக்கப்பட்டான் என்று சொல்வதற்கு வேறு வழியும் உண்டு ( மாற். 16 : 16), அவன் மறுபடியும் பிறந்தவன் (யோவா. 3 : 5) ஒருவனுடைய எல்லாப் பாவங்களும் ஞானஸ்நானத்திலே மன்னிக்கப்பட்டு, அவன் புதியதொரு வாழ்க்கையை துவங்க ஆயத்தமாகிறான் என்ற உண்மை எத்தனை அருமையானதாக இருக்கிறது.

**2. சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதன் மூலம் ஒருவன் கிறிஸ்துவுக்கு உள்ளாக வருகிறான்.**

"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? (ரோம 6 : 3)". நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக

ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவை தரித்துக்கொண்டீர்களே". (கலா. 3 : 26, 27) II கொரி. 5 : 17. நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பதால், அவருக்குள் தேவன் நமக்கு வைத்திருக்கும் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் சொந்தமாக மாறுகிறோம்.

**3. சுவிசேஷத்திற்கு ஒப்புக்கொடுக்கும் போது ஒருவன் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் சபைக்குள்ளாக வருகிறான் :**

I கொரி. 12 ம் அதிகாரத்தில் அப்போஸ்தலன் பவுல் கிறிஸ்துவின் சரீரத்தைக் குறித்து அதிகமாக விவரித்தார். அந்த சரீரம் சபை என்று நமக்கு சொல்லப்படுகிறது. (கொலோ. 1 : 18, எபே. 1 : 22, 23) ஞானஸ்நானத்தின் மூலமாகத்தான் நாம் அந்த சரீரத்திற்குள்ளாக போகிறோம் என்பதை அவர் விளக்குகிறார். "எதிலே மற்றச் சபைகளுக்குக் குறைவாயிருந்தீர்கள்? நான் உங்களை வருத்தப்படுத்தாதிருந்ததே உங்களுக்கு குறைவு ; இந்த அநியாயத்தை எனக்கு மன்னியுங்கள் II கொரி. 12 : 13 )". உலகமனைத்திலும் சபையானது மகத்தானதொரு அமைப்பாக திகழ்கிறது. அதை அழிக்கவே முடியாது. அது என்றென்றைக்கும் நிலை நிற்கும். அந்த சரீரத்திற்குள்ளாக இருப்பது எத்தனை பாக்கியமானது.

**4. நாம் இப்பொழுது தேவ புத்திரர்களாயிருக்கிறோமாதலால், கிறிஸ்தவர்களாகவும் இருக்கிறோம் :**

ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப் படுத்தக்கடவன் ( I பேதுரு. 4 : 16) ஏன்? ஏனென்றால், கிறிஸ்துவின் நாமத்தில் இரட்சிப்பு உண்டு. அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை ; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" என்றான் (அப். 4 : 12). இதைக்குறித்து சிந்தித்துப்பாருங்கள், நாம் அவரை விசுவாசித்து, அவர்தம் போதனைக்கு கீழ்ப்படிந்ததால் அவருடைய நாமத்தை நாம் தரித்துக்கொள்ளும்படி அனுமதிக்கிறார். இதுவே நமக்கு மிகப்பெரிய ஆசீர்வாதமாக இருக்கிறது.

**5. கிறிஸ்தவர்களாக இருக்கும் நம்மால், தேவனை ஆராதிக்க முடிகிறது**

"உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது, தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர் களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரை தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்

என்றார். (யோவா. 4 : 23, 24)". நாம் ஒன்றாக கூடிவருதலை விட்டு விடக்கூடாது என்று புத்தி சொல்லப்படுகிறோம். "சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்". (எபிரெ. 10 :25). தேவனை ஆராதிப்பதற்கு, கர்த்தருடைய ஜனங்களோடு கூடி வருவது எத்தனை இன்பமாக இருக்கிறது. இதை நாம் ஒரு சுமையாகவோ, நாம் செய்ய வேண்டிய கடமை என்றோ எண்ணாமல், இதை ஒரு சிலாக்கியமாக எண்ணுதல் வேண்டும். நமது முக்கிய விருந்தினராக ஆண்டவர் இருப்பதாக வாக்கு செய்திருக்கிறார். அவர், சொல்லும் போது "ஏனெனில் இரண்டுபேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன் என்றார்". (மத். 18 : 20)

**6. ஐக்கியம் என்கிற ஆசீர்வாதமும் உண்டு :**

"அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந் நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப். 2 : 42)". கிறிஸ்தவர்களாக இருக்கும் நமக்கு, நம் சக கிறிஸ்தவர்கள் தரும் ஊக்கம் மிக அவசியமாக இருக்கிறது. வாரந்தோறும் நமது கூடுகையின் நோக்கத்தில் ஒன்றாக இது இருக்கிறது. இந்த பந்தத்தினால் ஆராதனையில், கிரியைகளினால், வரும் பலன் ஐக்கியமாக இருக்கிறது. ஆகவே மிகப்பெரிய ஆசீர்வாதமாக இருக்கிறது.

**7. ஜெபம் என்னும் சிலாக்கியம் நமக்கு உண்டு :**

தேவன் எல்லாருடைய ஜெபத்தையும் கேட்பதில்லை. வேதம் சொல்லுகிறது. "பாவிகளுக்கு தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறேன் ; ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார். (யோ. 9 : 31)" வேறு வார்த்தையில் சொல்லுவோமானால், ஜெபம் என்பது தேவனுடைய பிள்ளைகளுக்கென்று கொடுக்கப்பட்டிருக்கும் சிலாக்கியமாயிருக்கிறது. அவர்கள் தான் தகப்பன் என்று சொல்லி தேவனிடத்தில் சேர முடியும். இருப்பினும் நம்முடைய ஜெபம் கேட்கப்பட்டு, அதற்கு சாதகமான பதில் தரப்படவேண்டுமென்றால், நம்முடைய ஜெபம் அவருடைய சித்தத்தின்படி அமைய வேண்டியது அவசியம். "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம் ( I யோவா. 5 : 14) இன்னுமாக எபிரெய ஆசிரியர் சொல்லும்போது, "ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். (எபி. 4 : 16)". இங்கே ஜெபத்தினால் நாம் பெற்றுக் கொள்ளும் மிகப்பெரிய

ஆசீர்வாதத்தைப் பற்றி பேசுகிறார். நமது பிரச்சனை, துக்கம் அல்லது கர்த்தரிடத்தில் நாம் சொல்ல வேண்டியது எதுவாக இருந்தாலும், அதைப் பற்றி நாம் கவலைப்படாமல், அவர் நமக்கு தந்த மிகப் பெரிய சிலாக்கியத்தை எண்ணி நாம் சந்தோஷப்படலாம், அது மாத்திரமல்ல நாம் அவரிடம் இவைகளை சொல்லும் போது, அவருடைய பிள்ளைகள் என்பதையும், நம்முடைய வேண்டுதலுக்கு இரங்குவார் அதை புரிந்து கொண்டு தக்க பலனை அளிப்பார் என்பதையும் அறிந்தவர்களாக ஜெபிக்கலாம்.

**8. ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் நாம் கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்கையில் அவரை நினைவுகொள்ளும் பாக்கியத்தைப் பெறுகிறோம்**

பவுல் அதைக் குறித்து இப்படியாகப் பேசுகிறார். "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? (I கொரி. 10 : 16) "நமக்காக மரித்தவரின், இரத்தத்தையும், அவருடைய சரீரத்தையும் நாம் நினைவு கூர்ந்து அவருக்கு மரியாதை செலுத்துவது உண்மையில் நமக்கு கிடைத்த மிகப்பெரிய பாக்கியம். அதினாலே நாம் ஆவிக்குரிய பெலனை நாம் இன்னும் அதிகமாக பெற்றுக்கொள்ள முடியும்.

**9. கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்த நாம், பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுகிறோம்**

அப். 2:38ம் வசனத்தை நாம் கவனித்தால், அதில் நாம் மனந்திரும்பி, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும் போது, பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுகிறோம். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகியோர் நம்மோடு வாசமாக இருப்பது எத்தனை பெரிதான ஆசீர்வாதம், அதற்கு ஈடு இணை எதுவுமில்லை, இதைவிட மேலான வேறு எந்த சிலாக்கியம் நமக்கு கிடைக்க கொடுக்கப்பட வேண்டும்.

**10. அவருக்காக வாழும் சிலாக்கியமும், இப்புவியில் அவரை மற்றவர்களுக்கு காண்பிக்கும் பாக்கியமும் கிடைக்கிறது**

"வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள். (கொலோ. 3 : 17)", கிறிஸ்து தாமே சொன்னார், முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். (மத். 6 : 33)".

**11. கர்த்தருடைய வழியை மற்றவர்களுக்கு போதிக்கும் சந்தோஷத்தையும், கர்த்தர் எப்பொழுதும் நம்மோடு இருக்கிறார் என்பதையும் அறிந்துகொள்ளலாம்.**

சத்தியத்தை போதித்து கிறிஸ்துவின் பக்கமாக ஒருவனை இழுப்பதை விட மற்றவர்களுக்கும் இவ்வுலகத்திலும் நாம் செய்யும் மிகப்பெரிய காரியம் வேறு எதுவாக இருக்க முடியும்? அதுமாத்திரமல்ல அவருடைய சித்தத்தின்படி நாம் தொடர்ந்து நடக்கையில் அவர் இப்பொழுதும், எப்பொழுதும் நம்மோடு இருப்பேன் என்று வாக்கு செய்திருக்கிறார் என்று எத்தனை அதிசயமானது அவர் என்ன சொல்கிறார் என்பதை வாசியுங்கள். "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத். 19 : 20)

**12. இறுதியாக, நாம் அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு, அவருக்கு உண்மையாக நடந்தோமானால், நமக்கு அவர் ஜீவகிரீடத்தை அல்லது நித்திய ஜீவனைத் தருவேன் என்கிறார்.**

"ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்" (வெளி. 22 : 14) "நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே ; இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான் ; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன் (வெளி 2 : 10)

கர்த்தர் தம்முடையவர்கள் மீது அக்கறை இல்லாதவர் என்று யார் சொன்னது? கிறிஸ்தவ வாழ்க்கை சந்தோஷமில்லாதது என்று யார் சொன்னது? கிறிஸ்தவ வாழ்க்கை நமக்கு ஒன்றும் தராது என்று யார் கூறியது? கிறிஸ்தவன் ஒன்றையும் எதிர்பார்க்க முடியாது என்று யார் விளம்பியது? ஒருவன் வாழக்கூடிய வாழ்க்கையில், கிறிஸ்தவ வாழ்வே மிகச் சிறந்ததாகவும் மிகவும் பலன் தரக்கூடியதாகவும் இருக்கிறது. ஒருவன் பரத்திலிருந்து விடுபட்டு, சமாதானமான வாழ்க்கை வாழவும், அநேக காரியங்களை எதிர்பார்க்கவும், அதற்காக வாழவும் கிறிஸ்தவம் ஒருவனுக்கு வழிவகை செய்கிறது. அவன் இம்மையிலும், மறுமையிலும் ஆசீர்வதிக்கப்படுகிறான். அவன் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும் போது அவனுக்கு இவைகள் எல்லாம் கிடைக்கிறது. அதுதான் வாழ்க்கையின் துவக்க நேரம், அங்குதான் அளவில்லாத ஆசீர்வாதங்கள் ஆரம்பமாகிறது.

**J.C. CHOATE** **J. C. சோட்**



# மனைவியைத் தெரிந்தெடுக்கும் சமயத்தில் கிறிஸ்தவம் என்பது முக்கியமில்லையா?

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே, கடந்த இரு மாதமும் கணவனுக்குச் சரியான உதவிக்காரியாய் இருப்பது பற்றி வேதவசனங்களின் துணை கொண்டு பார்த்தோம். அது குடும்ப வாழ்க்கைக்கு பெரிதும் உதவியாய் இருந்திருக்கும் என்று நம்புகிறோம்.

நாம் பல நேரங்களில் பல காரியங்களுக்காக முடிவு எடுக்கும் நிலைக்கு கட்டாயமாகத் தள்ளப்படுகிறோம். அந்த நேரத்தில் அது சரியான முடிவா? நாம் எடுக்கும் முடிவு வேதம் சொல்கிறபடி இருக்கிறதா? தேவன் அதில் பிரியப்படுவரா என்றெல்லாம் சிந்திக்கிறோமா? ஆவியானவர் வசனத்தின் வாயிலாக எல்லா ஆலோசனைகளையும் கொடுத்திருந்தாலும், சந்தர்ப்பம் வரும்போது உலகப் பிரகாரமான மக்களைப் போலவே சுய புத்தியின்மேல் சார்ந்து தவறான முடிவுகளை எடுத்து விடுகிறோம். அதனால் ஏற்படும் விளைவுகளை கடைசி வரை அனுபவிக்க வேண்டியவர்களாகி விடுகிறோம்.

இம்மாதம், வாழ்க்கைத் துணைவியை தேர்ந்தெடுக்கும் சமயத்தில் ஒரு கிறிஸ்தவனின் நிலை எப்படி இருக்க வேண்டும். அவன் அதில் எந்தமாதிரியான முடிவை எடுக்கிறான் என்பது பற்றி வசனத்தின் துணை கொண்டு பார்ப்போம்.

நமது இந்தியாவில் காலங்கள் வெகுவாக மாறிக் கொண்டிருக்கிறது. அதற்கேற்றாற்போல் பழக்க வழக்கங்களும், அதிலும் குறிப்பாக பட்டணங்களில் மாறிக் கொண்டேயிருக்கிறது. வாலிபத்தில் உள்ளவர்கள் தங்களுக்கென்று ஒரு கணவனையோ, மனைவியையோ தேர்ந் தெடுக்கும் போது, அதை தங்கள் சொந்த விருப்பத்தின்படியாக தெரிந்தெடுக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் . பக்குவப்படாத சூழ்நிலையில் இருக்கும் அவர்கள், பல சமயங்களில் தங்களுக்கென்று கிடைக்கப் போகும் வாழ்க்கைத் துணை அழகுள்ள, துடிப்பான, செல்வம் நிறைந்ததாக இருக்க வேண்டும் என்ற கண்ணோட்டத்தோடே இருக்கிறார்கள். பெற்றோரால் திட்டமிட்டு செய்யப்படும் திருமணத்தில் கூட, மிக முக்கியமான குணாதிசயங்களின் பட்டியலில் முதன்மை இடத்தைப் பெற்றிருக்க வேண்டிய அம்சங்கள், பெற்றோரால் தீர்மானிக்கப் படாமல் பிள்ளைகளாலேயே அது தேர்ந்தெடுக்கப்படுகிறது.

இளம் வயதுள்ள ஒரு நபர் தனக்குத் துணையை தேர்ந்தெடுக்கும் போது எந்த வகையான பண்புத் திறனை உடையதாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்? பெற்றோர்கள் எந்த வகையான பண்புகளை

தங்கள் மனதில் கொண்டவர்களாக இருக்க வேண்டும்? விசேஷமாக கிறிஸ்தவர்கள் மத்தியில் கிறிஸ்துவின் சபையிலே அங்கமாக இருப்பவர்களுக்கு எது மிக முக்கியம்?

ஒரு வளர்ந்த கிறிஸ்தவனுக்கு அல்லது தேவ ஞானத்தின்படியாக சிந்திக்கும் கிறிஸ்தவ பெற்றோர்களுக்கு, முதலில் அதிலும் முக்கியமாக கருதப்பட வேண்டிய ஒன்று இருக்குமானால், அது அந்தத் துணை ஒரு அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவனாக இருக்கவேண்டும். நம்முடைய பிள்ளைகள் மிகச் சிறியவர்களாக இருக்கும்போது, நம்முடைய பிள்ளைகளுக்காக ஒரு சிறு பையனையோ, பெண் பிள்ளையையோ, ஒரு அன்பான கிறிஸ்தவப் பெற்றோர்கள் எங்கேயோ வளர்த்துக் கொள்ளப்பட்டு வருவார்கள். ஒருநாள் அவர்கள் நம் பிள்ளைகளை மணந்து கொள்ள நேரிடும் என்று அடிக்கடி ஜெபித்திருப்போம். ஆனால் அதை அனுபவிக்க முடியாமல் போயிருந்திருப்போம்.

சிலபேர் இப்படி கேட்கலாம், ஏன்? சபையின் அங்கத்தினர் என்பது அவ்வளவு முக்கியமா? ஒருவன் எந்த மதத்தைத்தான் தழுவினால் என்ன? என்று. இதற்கு பதிலாக கூறவேண்டுமானால்,

★ ஒரு கணவன் அல்லது மனைவியை தேர்ந்தெடுக்கும் சமயத்தில் சில கேள்விகளை நாம் கேட்டுப்பார்க்க வேண்டும்.

★ இந்த மனிதன் என் குடும்பத்திற்கு ஆவிக்குரிய தலைவனாக இருப்பாரா? அவர் ஒரு உறுதியான கிறிஸ்தவனாக இல்லாத பட்சத்தில் நான் ஒரு விசுவாசமுள்ள ஜீவியம் வாழ்ந்து நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள எந்த அளவிற்கு எனக்கு உதவி செய்வார்?

★ நான் தெரிந்தெடுக்கபோகும் இந்த மனிதன் ஒரு கிறிஸ்தவன் அல்ல. எந்த மாதிரி பழக்கம் இவனுக்கு இருக்கும்? அல்லது எப்பேர்ப்பட்ட பழக்கத்தை இவன் வளர்த்துக் கொள்வான்? அவன் குடிப்பானா? பொய் பேசுவானா? ஏமாற்றுவானா? ஒழுங்கற்ற வாழ்க்கையுடையவனா? என்னையும், என் பிள்ளைகளையும் முறையாக நடத்துவானா? என் குடும்பத்திற்கு சமாதானத்தைக் கொண்டு வருவானா? அல்லது இவனால் அங்கு சண்டை இருக்குமா? என் வாழ்வின் மத்தியஸ்தராக தேவன் இருக்கும்போது, அவர் தான் முதல் இடத்தை பெற வேண்டும். ஒரு வேளை என் கணவர் தேவனுக்கு இடமே அளிக்காதவராக இருந்தால், பிறகு புரிந்து கொள்ளாமையும், வேதனையும் அங்கே இருக்கத்தானே செய்யும்?

★ இந்தப் பெண் என் பிள்ளைகளுக்கு தாயாகப் போகிறவள். என்னைக் காட்டிலும் அதிகமான நேரத்தை அவள்தான் பிள்ளைகளோடு செலவிடப்போகிறாள். அவள் ஒரு கிறிஸ்தவளாக இல்லாத பட்சத்தில் ஆவிக்குரிய விஷயங்கள் பற்றி எப்படி பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க முடியும்?

★ என் மனைவி என்று எண்ணும்போதே அவளுடன் அன்பை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறேன். அவள் ஒரு கிறிஸ்தவளாக இல்லாத பட்சத்தில் அவளை நான் கிறிஸ்துவண்டை கொண்டு வர இயலாது. அவளோடு சேர்ந்து வாழ்ந்து மரித்து, நித்தியத்தையும் இழப்பதென்பது மிகவும் வேதனைக்குரிய விஷயமாகும்.

★ கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்களல்லாத ஒருவரை மணந்து கொள்ளும்போது 10 க்கு 8 பேர் கிறிஸ்துவையும், சபையையும் விட்டு பின்வாங்கிப் போய் விடுகின்றனர் என்று புள்ளி விபரம் கூறுகிறது. அந்த எட்டுப்பேரும் எரிகிற அக்கினிக்கு பங்காகி விடுகின்றனர். அநேகர் கிறிஸ்தவர்களல்லாதவர்களை மணந்து, இழந்துபோனவர்களாய், தேவனை மறந்துவிட்டு வெகுதூரம் சென்று விடுகிறதைப் பார்க்கும்போது நான் அந்த மாதிரி தவறு செய்வதை தவிர்க்கவே விரும்புகிறேன்.

**II கொரி 6 : 14 – 18 வசனங்கள் இவ்வாறாக நம்மை எச்சரிக்கிறது**

"அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப் படாதிருப்பீர்களாக. நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?".

"தேவனுடைய ஆலயத்துக்கும், விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள். என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே".

"ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்".


"அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்கு பிதாவாயிருப்பேன். நீங்கள் எனக்குக் குமாரரும், குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்"

நம்முடைய பரலோகத்தின் தகப்பன், தம்முடைய அநந்த ஞானத்தினாலே இந்த வசனங்களை நமக்கு எழுதிக் கொடுத்து, வாழ்க்கைத் துணையை தெரிந்தெடுப்பதில் நாம் தவறான முடிவை எடுத்து விடக்கூடாதென்று கருதி, நமக்கு பாதுகாப்பான சில வழிகளையும் கொடுத்துள்ளார். கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டுமென்று தீர்மானிப்பதோடு, மனைவியையோ, கணவனையோ தெரிந்தெடுத்தல் என்பது மிகவும் கடினமான வேலை. ஒருவன் இதற்காக உண்மையாக ஜெபிக்காமல் இருக்க முடியாது. ஏனென்றால் ஒரு சிறிய காரியம்

(தெரிந்தெடுப்பது) எல்லா தீர்மானங்களையும் பாதிக்கக்கூடியது, மேலும் திருமணம் அதைத் தொடர்ந்து வாழ்க்கை இப்படி எல்லாக் கோணங்களிலும் பார்க்க வேண்டியுள்ளது. ஒரு கிறிஸ்தவர், அர்ப்பணிப்புள்ள ஒரு கிறிஸ்தவரை மணந்து கொள்ளும்போது தேவனோடு அவர்கள் ஸ்திரமாக வளர முடியும். விலையேறப்பெற்ற விசுவாசத்தில் தங்கள் பிள்ளைகளை வளர்க்க முடியும். ஆனால் கிறிஸ்தவர்களல்லாதவர்களை மணக்க நேரிடும்போது கிறிஸ்தவம் முக்கியமல்லவென்று ஒருவன் எண்ணும்போது கிறிஸ்தவத்தைப்பற்றி அவன் கொண்டிருக்கும் மதிப்பின் அளவு, அவனுடைய ஆரம்ப தீர்மானமே தன் வாழ்க்கையில் பல தீமைகளை கொண்டுவர காரணமாகி தன் சொந்த ஆன்மாவிற்கு நித்திய அழிவைத் தேடி, தன் பிள்ளைகளின் ஆத்துமாக்களும் அழிந்துபோய், தனக்குப் பின் வருகிற தலைமுறையே ஆன்மீக அழிவை சந்திக்க நேரிட்டு விடும். ஆக தயவுசெய்து, இந்த தீர்மானத்தைப்பற்றி மீண்டும் ஒரு கணம் சிந்தியுங்கள்.

B.B. CHOATE

R.R. NAYAGAM



# இன்னும் ஓர் இரவு

பகலெல்லாம் புவியின் ஒரு புறம் தன் கதிர்க்கரங்களை படரவிட்ட பகலவன், தான் மிளிறிக் கொண்டிருந்தயிடத்து மக்கள் கடினமாக உழைத்துக் களைத்திருப்பதால், அவர்கள் ஒய்வெடுக்கட்டுமெனவும், அமைதியாய் ஊனுக்கு உறக்கத்தைத் தரட்டுமெனவும் கருதி, கடல் வழி புகுந்து, புவியின் அந்தப்புறம் சென்றதினால், இப்புறத்தில் இரவி மறைந்து, இருள் புரவி மீதேறி வெகுவிரைவாய் பரவி, இரவு நிலவு உலகில் உதிக்கலானது. ஞாயிறு சென்று திங்கள் வானில் வந்த இரவு வேளையில், மனிதனின் மனது அமைதிச் சோலைக்குள் ஒய்வுப் புஷ்பங்களை தேடிச் செல்லும். நாள் முழுவதும் தனக்கு நிகழ்ந்த ஒவ்வொன்றையும் பற்றி ஆய்வு கொள்ளுமென்பது நாமறிந்த உண்மை.

அறிவு பண்டகசாலையாக திகழும் கல்விச் சாலைக்குச் செல்லும் மாணவ செல்வங்கள், ஓராண்டு காலமாக ஓயாது அறிவு விரும்பிகளாக இருந்தாலும், ஆண்டிறுதி தேர்வு முடிந்து விடுமுறை சீக்கிரமாக வரவேண்டுமென எதிர்பார்பதுண்டு. குவலயத்தில் குடியிருக்கும் மனிதர்கள் வியாதிப்படுவது, வாழ்வின் ஒரு பகுதியாக இருந்தாலும், நோய் வந்து அவன் உடலைத் தாக்கும் வேளையில் எத்துனை பலவானாக இருந்தாலும் அப்பிணி காலை நேரத்துப் பனி போல் நீங்கிவிட வேண்டுமென ஆவலுருவது மானுடத்தின் வழக்கம். ஆனால், இந்த வழக்கத்திற்கு மாறாக, தானும், தன் நாடும் அவதிப்படும் வேளையில் எப்போது வேண்டும் நிவாரணம் நீயே சொல்லென்று கேட்கப்பட்ட போது, "**நாளை**" என்று சொன்ன மதியில்லா மன்னனை இந்தாண்டின் கடைசி மாதத்தில் உங்கள் முன் நிறுத்த எத்தணிக்கிறேன், நிற்பவனை நிதானித்தறிவீர்களென்ற நம்பிக்கையுடன்.

## "நாளைக்கு" என்றான்

கோசேன் நகரிலே கோலாகலம், கொடுமையை எதிர்த்து கடுமையாய் வதைந்து அன்றுவரை கூக்குரலிட்ட கூட்டம், ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபு ஆகிய தங்கள் பிதாக்களின் தேவனாகிய சர்வவல்லவரின் துணையோடு, விடுதலை கீதம் முழங்கி, அடிமை சங்கிலி அணிந்திருந்த் அவர்கள் ஆண்டவரை ஆராதிக்கும்படி அரசன் எங்களை அனுப்பிவிட வேண்டுமென ஆர்ப்பரிக்க துவங்கிய நாள். பாராளும் பரமதேவன் பார்வோனுக்கு முன் அடையாளங்களை நடப்பித்து என் ஜனங்களை போகவிடு என்று மோசேயின் மூலமாக ஒலிக்கலானார். ஆனால், அவனோ யார் அந்த தேவன், நான் அவரை அறியேன் என்று சொல்லி அவரை பழிக்கலானான்.

எகிப்தில் பத்து வாதைகளை யேகோவா தேவன் நடப்பித்த பொழுது நீங்களும் ஓர் எகிப்தியனாக இருந்ததாக நினைத்துக் கொள்ளுங்கள் பயம் உங்களை எவ்வளவாக கவ்விக் கொள்ளும் என்பதை யோசித்துக் கொள்ளுங்கள் தங்களுக்கு வாழ்வாக இருந்த நைல் நதி, குருதியாக மாறி, நாறிப்போனது என்பதை கண்டார்கள். ஆனால், எகிப்திய முடியோ தன் முடிவை மாற்றியதாக தெரியவில்லை. இவ்வேளையில் தான் தேவன், மோசேயை பார்வோனிடம் அனுப்பி, "எனக்கு ஆராதனை செய்ய என் ஜனங்களை அனுப்பிவிடு, நீ அவர்களை அனுப்பிவிடமாட்டேன் என்பாயாகில் உன் எல்லை அடங்கலையும் தவளைகளால் வாதிப்பேன்". (யாத். 8 1 : 2) என்றார்.

நதியிலிருந்த தவளைகள் நாட்டிற்குள் வந்தது, எங்கும் தவளை, எதிலும் தவளை, அதுவும் எகிப்தியர்கள் தவளையை செழிப்பின் சின்னமாக எண்ணினார்கள். தவளைகளுக்கு காயத்தை ஏற்படுத்துபவர்களுக்கும் அதின் உயிரை எடுப்பவர்களுக்கும் கடுமையான தண்டனை காத்திருந்தது. ஆனால் இப்பொழுது படுக்கையில், அடுக்களையில், காலணியில் காணுமிடமெல்லாம் தவளை, ஐயகோ! இது எப்போது போகுமென்ற கவலை எகிப்தியர்களுக்கு ஏற்பட்டது. அவ்வேளையில்தான் **மோசே சிங்காசனத்தில் அமர்ந்திருந்த பார்வோனிடம் சென்று, இது உம்மையும், உம்நாட்டையும் விட்டு நதிக்கு போக வேண்டிய நாழிகையை முடிவு செய்யும் மேன்மை உமக்கே இருப்பதாக என்றான். ஆனால் பாதகன் பார்வோனோ "நாளைக்கு" என்றான்.** (யாத். 8 : 10)

மோசேயாக பார்வோனிடம் சென்று இதைக் கேட்கவில்லை, அப்பித்தன்தான் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்தான். தவளைகள் நீங்க வேண்டுமென கர்த்தரை நோக்கி வேண்டிக் கொள்ளுங்கள் என்றான். அதுவுமல்லாமல் ஜனங்களை நான் போகவிடுவேன் என்றும் சொன்னான் (யாத். 8 : 18) இப்படிச் சொன்னவனிடம்தான் தவளைகள் எப்போது நீங்க வேண்டுமென கேட்கப்பட்டது. அவனிடமிருந்து என்ன பதிலை நாம் எதிர்பார்க்கலாம்? **நாடும், வீடும் அவதிப்படும் வேளை, எங்கும் தவளை, இந்த கீழ்நிலை உடனே மாற வேண்டுமெனதானே ஒரு கொற்றவன் நினைப்பான். ஆனால் இந்த கோனோ, ஏனோ, "நாளைக்கு" என்றான். அதாவது, இத்தவளைகள் இன்னும் ஓர் இரவு இருக்கட்டும் என்கிறான். நானும், என் நாடும் இன்னும் ஒரு நாள் அவதிப்படுகிறோம் என்கிறான்.**

கர்த்தருடைய வேதம், நாம் இரவில், தற்பரிசோதனை செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறது, கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற தாசன் தாவீது சொல்கையில், "உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள்" (சங் 4 : 4) என்கிறான். ஆசாபும் தன் சங்கீதத்தில் "இராக்காலத்தில் என் சங்கீதத்தை நான் நினைத்து, என் இருதயத்தோடே சம்பாஷித்துக் கொள்வேன் என் ஆவி ஆராய்ச்சி

செய்தது" என்கிறான். (சங் 47 : 6) வாலிபர்களே! பார்த்தீர்களா, இரவு வேளை என்பது தன் நிலை உணரும் வேளை, ஆராய்ச்சி செய்யும் வேளை என வேதம் சொல்லுகிறது. ஆனால் இம்மாமனிதனோ தவளைகளுடன் அதைக் கழிக்க விரும்புகிறான்.

வாலிபர்களே! இன்னும் அநேகர் எங்கள் வேதனை நீங்க ஜெபியுங்கள், கர்த்தரை நோக்கி ஜெபியுங்கள் என்பார்கள், ஆனால் நாம் **அவர்களிடம் வேதனை நீங்க, நீங்கள் தேவனை நாட வேண்டுமென்றால், பாவமாகிய தவளையை விடவேண்டுமென்றால், தீயபழக்கங்களை ஒழிக்க வேண்டுமென்றால், இப்பார்வோனைப் போலவே அவர்கள் நம்மைப் பார்த்து, "நாளைக்கு" என்பார்கள். அவர்கள் பாஷையிலே "நாளைக்கு" என்பது என்றுமே வராது.** இவர்களை பற்றி நினைக்கும்போது யூதா தேசத்துக் கடைசி அரசனாகிய சிதேக்கியா தான் என் நினைவுக்கு வருகிறான். கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்க மாட்டான். (எரே. 37 : 2) ஆனால், எனக்காக தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணுங்கள் என்பான் (எரே. 37 : 3 ) இவர்கள் எல்லாரும் ஓர் இனம் தானே.

அப்போஸ்தலனாகிய பவுல், சுவிசேஷத்திற்காக கட்டப் பட்டிருக்கையில் அரசர்களுக்கு முன்பாக நின்றான். அப்படி அவர் நின்ற ஓர் அரசன் பேலிக்ஸ், அவனிடத்தில் நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசினான். இதைக் கேட்ட அவன் பயந்தான், **ஆனால் பாவத்தின் மேல் அவன் கொண்ட ஆசை, மோகத்தின் மேல் அவனுக்கிருந்த தாகம், அவனை மனந்திரும்ப விடவில்லை. பார்வோன் சொன்னது போலவே, நீ போகலாம், "நாளைக்கு" அதாவது வசதியான நேரம் வரட்டும் என்றான். அது அவனுக்கு வந்ததாகத் தெரியவில்லை.** வாலிபர்களே, நீங்களும் கூட இப்போதுதானே, நான் ஒரு வாலிபன் இன்னும் எத்தனையோ நாட்கள் என் வாழ்வில் உண்டே அதற்குள் நான் திருந்த வேண்டுமா? வேண்டாம்! வேண்டாம்!! தவளைகள் நாளைக்குப் போனால் போதும் இன்னும் அது என்னோடு இருக்கட்டும் என்று நீங்கள் சொல்லவேண்டாம். நாளை என்பது நம் கையில் இல்லை.

எனக்கன்பான வாலிபர்களே, இந்த ஆண்டு இறுதியில் வந்து நிற்கிறோம். நாம் கடந்த ஆண்டு பலவிதமான பாவங்களோடு போராடியிருக்கலாம். சிலர் நம்மை ஏளனமாக பேசி இருக்கலாம். நாம் பலரது செய்கையால் காயப்பட்டிருக்கலாம். ஆனாலும் நம்மைத் தாயின் கருவறையிலிருந்து காப்பாற்றின தேவன் இப்பொழுதும் பராமறிக்கிறார் என்பதை மறந்து விடக்கூடாது. நம்மிடம் தேவன் பாவமாகிய தவளையை நீக்கு என்கிறார். நாமோ அதற்கு "நாளைக்கு" என்று சொல்லாமல், அவரே தஞ்சமென வரும்போது அவர் நம்மை சந்தோஷமாக ஏற்றுக் கொள்வார். நம்மை ஆசீர்வதிப்பார், சமாதானத்தை அருளிச் செய்வார். ஆமென்!

**ஜே. பிக்கின்ஸ்**

# தவறு செய்ய மறுத்த வாலிபன்




என் அன்பு சிறார்களே உங்களை இந்த மாதம் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். நமதாண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். மாதந்தோறும் இடம் பெறும் பகுதிகள் உங்களுக்கு பயனுள்ளதாய் இருக்கும் என நம்புகிறேன். இம்மாதம் ஒரு சிறந்த கதையை உங்களுக்கு சொல்கிறேன். என்னோடு கூட வாருங்கள்.

தேவனுக்குப் பிரியமாக நாம் எப்படி வாழ வேண்டும் என்பதைப் பற்றியும், தேவனை நாம் புரிந்து கொள்ளவும் அநேக வேதாகம கதைகள் நமக்கு உதவியாயிருக்கின்றன. அதிலிருந்து ஒரு கதையை இந்த மாதம் நான் உங்களுக்குக் கற்றுத்தருகிறேன். அந்தக் கதை யாரைப்பற்றி தெரியுமா? தேவனுக்கு விரோதமாக தவறு செய்ய மறுத்த ஒருவரை பற்றி நாம் பார்க்கப் போகிறோம். வாசியுங்கள் (தானி. 6 : 1 - 28) சரி, உள்ளே செல்லுவோமா?

தரியு என்னும் பேர்கொண்ட ராஜா ஒருவன் இருந்தான். அவனுக்கு சில பிரதானிகளும், மந்திரிகளும் இருந்தார்கள். அந்த பிராதனிகள் ராஜாவினிடத்தில் ஒரு கோரிக்கை வைத்தார்கள். அது, தேசத்தில் ராஜாவைத் தவிர யாரிடத்திலும் ஜெபிக்கக் கூடாது என்றும், அப்படி ஜெபிப்பவர்கள் சிங்கங்களின் கெபியில் போடப்பட வேண்டும் என கூறினார்கள். ராஜாவும் அதற்கு ஒப்புக் கொண்டார். அதன்படி, ஒரு மாதம் முழுவதும் யாரும் ஜெபிக்கக் கூடாது என ராஜா சட்டம் விதித்தார்.

ராஜாவிற்கு பிரியமான, உண்மையான பிரதானியாக ஒருவன் இருந்தான். அவன் பெயர் தானியேல் அவன் தேவனுக்குப் பிரியமும் உண்மையுமாய் நடக்கிறவன். ராஜாவினிடத்தில் ஜெபிப்பது தவறு என்பதை உணர்ந்தான். எனவே தேவனிடத்தில் அவன் ராஜாவின் கட்டளையை பொருட்படுத்தாமல் தொடர்ந்து ஜெபம் செய்தான். அவன் மூன்று வேளையும் ஜெபம் செய்தான்.

ஆனால், மற்ற பிரதானிகளோ தானியேலுக்கு எதிராக எண்ணங்கொண்டு ராஜாவினிடத்தில் போய் தானியேலை போட்டுக் கொடுத்தார்கள். அதைக் கேட்டதும் ராஜா மிகவும் சோர்ந்து

போனார். ஏனென்றால் தானியேல், ராஜாவுக்குப் பிரியமானவன். ஆனால் சட்டம் தானியேலை சிங்க கெபியில் போடப்பட வேண்டும் என இருந்தது. எனவே தானியேல் சிங்க கெபியில் போடப்பட்டான்.

அந்த நாளின் இரவு நேரத்தில் தரியு ராஜாவிற்கு தூக்கமே இல்லை. அவர் சோர்ந்து போனார். ஏன் தெரியுமா? நான் முன்னே சொன்னது போல் தானியேல் ராஜாவுக்கு மிகவும் பிரியமானவன். அடுத்த நாள் அதிகாலை யிலே ராஜா சிங்க கெபியினிடத்திற்கு வந்து அவன் உயிரோடிருக்கிறானா என தெரிந்து கொள்ள தானியேலை கூப்பிட்டார்.

தானியேல் பதிலாக ராஜாவே சிங்கங்கள் என்னை சேதப்படுத்தாத படிக்கு தேவன் தம்முடைய தூதனை அனுப்பி அவைகளின் வாயைக் கட்டிப் போட்டார். (தனி. 6 : 22) என கூறினான். அதைக் கேட்டதும் ராஜாவுக்கு ஒரே மகிழ்ச்சி. ராஜா தன் வேலை ஆட்களை கூப்பிட்டு தானியேலை கெபியிலிருந்து தூக்கி விடச் சொன்னான்.

தானியேலுக்கு எதிராக எண்ணங்கொண்ட தீய பிரதானிகளின் மீது ராஜா கோபம் கொண்டார். எனவே அவர்களையும் அவர்கள் குடும்பத்தையும் கெபியில் போட்டார். அந்த சிங்கங்கள் அவர்களை கொன்று போட்டன.

இந்த தானியேல் நம் எல்லோருக்கும் ஒரு சிறந்த உதாரணமாவார். அவன் தவறு செய்ய நினைக்காமல் தேவனிடத்தில் ஜெபம் செய்தான். எனவே தேவன் தானியேலை காப்பாற்றினார். சிங்கங்களின் வாயில் இருந்து அவனைத் தப்புவித்தார்.

இதிலிருந்து நாம் கற்க வேண்டிய பாடம், மற்றவர்கள் நம்மை தீங்கு செய்ய சொன்னாலும், நாம் தீமையை செய்யாமல் எப்பொழுதும் நன்மையையே செய்ய வேண்டும். எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபிக்கிறவர்களாக இருக்க வேண்டும். அப்போது எந்தத் தீமையும், சூழ்ச்சியும் நம்மை ஒன்றும் செய்யாது.

**"உங்களுக்கு எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்"**

**ஏபில் ரோட்ஜர் நாயகம்**


# மற்றொரு வாய்ப்பு

சபையில், குடும்பத்தில், சமுதாயத்தில் பெண்களின் பங்கு பற்றி ஆழமான கருத்துக்களை, வேதத்தின் வெளிச்சத்தில் அலசி ஆராயும் ஒரு நூல்தான் **"திருமறையில் பெண்ணின் பங்கு"**. இந்நூல் பெண்களுக்கும், வேதாகம ஆசிரியர்களுக்கும், சபை விசுவாசிகளுக்கும், வேதாகம மாணவர்களுக்கும் மிகவும் பயன்படும். புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால் தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ. 20

தொடர்பு முகவரி

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**

தபால் பெட்டி எண் 27, காங்கயம் - 638 701. இந்தியா.

*குறிப்பு : M.O. கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதவும்.*

# "தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள்"

கடந்த மாதத்தில், பின்வரும் சூழ்நிலைகளால் நாம் கோபப்படும்போது, பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துகிறோம் என்ற பாடத்தைப் படித்தோம் : அவைகள் யாதெனில், காரணமில்லாமல் நம் சகோதரனிடத்தில் கோபப்படுவது, பழிவாங்க முயற்சிப்பது, மற்றவர்களை மன்னிக்க முடியாது என்ற ஆவியை பெற்றுக் கொள்ள, நமது கோபம் நம்மை வழிநடத்தும் போது, நீதியான கோபம் கொண்டாலும் அது பாவமான காரியத்தை செய்ய வழிநடத்தும்போது ; தேவன், ஒன்றை பாவமான நடக்கை என்று கூறி இருப்பதை, நாம் செய்திருக்கிறோமென்று ஒருவர், நம்மை கண்டிக்கும்போது நாம் அவர்கள் மீது கோபப்படுவது ; மற்றும் சூரியன் அஸ்தமிக்கும் வரை நம்முடைய கோபம் தணியாமலிருக்க நாம் அனுமதிப்பது என்பவைகள் தான்.

நாம் " பிசாசுக்கு இடம் கொடுக்கும் போது" அதாவது அவனுடைய சோதனைக்கு நாம் உட்படும்போது நாம் தேவனுக்கு துக்கத்தை உண்டாக்குகிறோம். நாம் திருடும்போது தேவனுக்கு துக்கத்தை உண்டாக்குகிறோம். நாம் பொருளை திருடும்போது மாத்திரம் அப்படிச் செய்யாமல் பொய்சொல்லும் போது, நாம் கட்ட வேண்டிய வருமான வரிக்கும் குறைவானது கட்டும்போதும், நாம் பெரும் நாள் கூலியைக் காட்டிலும் குறைவாக உழைக்கும்போது, ஒவ்வொரு ஞாயிறும் தம் திராணிக்குத்தக்கதாக கொடுக்காத போது நாம் அவரை துக்கப்படுத்துகிறோம்.

எபே. 4 : 28 ன் படி நாம் திருடுவதை நிறுத்தும் போது நாம் வேலை செய்ய வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். நம்முடைய கைகளால் வேலை செய்ய வேண்டுமென்று அவர் சொல்லுகிறார். அதுமாத்திரமல்ல நீங்களும் நானும், அவர் நல்லது என்று சொன்ன வேலையை செய்ய வேண்டுமென்கிறார். ஆனால் நாம் ஏன் இப்படி செய்யவேண்டுமென்று அவர் கட்டளையிடுகிறார்? I தீமோ. 5 : 8 நமது வீட்டை விசாரிக்கும்படியாக என்ற ஒரு காரணத்தை நாம் அறிகிறோம்.

ஆனால், எபே. 4 : 28 ல் நல்ல வேளையை நாம் செய்யும்படி தேவன் வேறொரு காரணத்தையும் கூறுகிறார். அது என்ன? அது என்னவென்றால், தேவையிலிருக்கும் ஒருவருக்கு நாம் உதவும் படியாகத்தான்.

இந்த வசனத்தில் காணப்படும், சுவிசேஷத்தின் வல்லமையைக் கவனியுங்கள் திருடன், உதாரத்துவமாக கொடுக்கும் ஒருவனாக மாற முடியும் அவன் தன் சிந்தனைகளை மாற்ற முடியும். அவன் ஒரு வேளை,

"உன்னுடையது என்னுடையது" என்று நினைத்திருப்பான், அதற்குப்பின் "என்னுடையது என்னுடையதே" என்று சிந்திக்கும்படியாகச் செய்கிறது.

நாம் படிக்க வேண்டிய அடுத்த வசனம் எபேசியர் 4 ஆம் அதிகாரம் 29 ம் வசனம். கெட்ட வார்த்தைகள் நம்முடைய வாயைவிட்டுப் புறப்படும்போது நானும், நீங்களும் தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துகிறோம். பின்வரும் உண்மையைப் பற்றி நாம் எத்தனை பேர் யோசிக்கிறோம். நாம் பேசும் வார்த்தைகள், நம்முடைய நித்தியத்தை பரலோகத்தில் கழிக்கிறோமா? அல்லது நரகத்தில் கழிக்கிறோமா? என்று தீர்மானிக்கும்.

மத். 12 : 26, 37 ல் நாம் பேசும் வீணான, பிரயோஜனமற்ற வார்த்தைகளுக்கு நியாயத்தீர்ப்பு நாளில் கணக்கு கொடுக்க வேண்டுமென்று தெளிவாக சொல்லியிருக்கிறார். ஆனால் அது மாத்திரமல்ல, நம்முடைய அன்பான இரட்சகர், நம்முடைய பேச்சினால் நாம் நீதிமானென்று தீர்க்கப்படுவோம் அல்லது ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவோம் என்று சொல்கிறார். இது நம்மை விழிப்படைய செய்ய வேண்டும்.

நீதி. 18 : 21 ல் தேவன் ஞானியைக் கொண்டு மரணமும், ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கிறது என்கிறார். வேறு வார்த்தைகளில் சொன்னால், நீங்களும், நானும் நமது நாவை மிகச் சிறந்தவைகளுக்கோ அல்லது மிக தீமையானவைகளுக்கோ பயன்படுத்தலாம். எபே. 5 : 4 ல் "வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும், தகாதவைகள்" இவைகளை நாம் பேசக்கூடாது என்கிறார்.

ரோமர் 3 : 14, அக்கிரமக்காரர்களை தேவன் இவ்விதமாக வர்ணிக்கிறார். "அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி, தங்கள் நாவுகளால் வஞ்சனை செய்கிறார்கள் ; அவர்களுடைய உதடுகளின் கீழே பாம்பின் விஷம் இருக்கிறது. அவர்கள் வாய் சபிப்பினாலும் கசப்பினாலும் நிறைந்திருக்கிறது.

யாக். 3 : 5 -10 வரையுள்ள வசனங்களில் கட்டுப்படுத்தப்படாத நாவைப் பற்றிய தேவனுடைய பயங்கரமான விவரிப்பை கவனியுங்கள். கட்டுப்படுத்தப்படாத நாவு ; சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது. அநீதி நிறைந்த உலகம் ; முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தும் ; ஆயுள் சக்கரத்தை கொளுத்தி விடுகிறது ; நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறது சகலவிதமான மிருகங்களையும் அடக்கிப் பழகின மனுஷனால் நாவை அடக்குவது கூடாததாக இருக்கிறது. அது அடங்காத பொல்லாங்குள்ளது, சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. அந்த நாவைக் கொண்டு தேவனைத் துதிக்கிறோம். தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை சபிக்கிறோம். ஆவியினால் ஏவப்பட்ட யாக்கோபு என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது" என்று கூறுகிறான்.

எபே. 4 : 29 ம் வசனத்தில் கெட்ட வார்த்தைகள் நம் வாயிலிருந்து புறப்படுவதற்கு பதிலாக பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தைகள் உண்டாக வேண்டும் என்கிறார். பக்தி விருத்தி என்பதற்கு கட்டுவித்தல் அல்லது பெலப்படுத்துதல் என்று பொருள். ஆகவே நமது நாவை, மற்றவர்களை கட்டுவிக்கும்படி, அதுவும் குறிப்பாக கிறிஸ்துவுக்குள்ளான சகோதர, சகோதரிகளை பெலப்படுத்தும்படியாக பயன்படுத்த வேண்டும்.

ஒருவருக்கொருவர் தேற்றும்படி பேசுவதே நமது இலக்காக இருக்க வேண்டும். (I தெ. 5 : 11) சகோதரர்கள் ஊக்கப்படுத்தும்படி தன் நாவை பயன்படுத்தின பர்னபாவை போன்றவர்கள், நமக்கு தேவையாக இருக்கிறார்கள் (அப். 4 : 36).

அதுமாத்திரமல்ல, இயேசுவானவருக்கு நாம் கீழ்ப்படிய வேண்டுமானால், நானும், நீங்களும் அவரைப்பற்றி மற்றவர்களுக்கு போதிக்கும்படி நமது நாவை பயன்படுத்த வேண்டும். அவருக்கு கீழ்ப்படிய விரும்புகிறவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, அவர் கற்பித்த எல்லாவற்றையும் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும். (மத். 28 : 19, 20) I தீமோ. 4 : 6 விசுவாசத்திற்குரிய வார்த்தைகளிலும், நாம் அநுசரிக்கிற நற்போதகத்திற்குரிய வார்த்தைகளிலும் சகோதரர்களை போஷிக்கவேண்டும். நீங்களும், நானும் அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை, அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்கு செலுத்த வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். (எபி. 13 : 15)

அடுத்ததாக எபே. 4 : 31 னை தயவுசெய்து வாசித்துக்கொள்ளுங்கள். பின்வரும் காரியங்களை செய்கிற குற்றத்தை செய்தால் அது பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தும், கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்த துர்க்குணமும் அப்படிச் செய்யும். இவைகள் தேவனுக்கு துக்கத்தை ஏற்படுத்துவதால் அவைகளை நாம் விட்டுவிலகும்படி அவைகளைப் பற்றி இன்னும் அதிகமாக அறிந்து கொள்ளவேண்டும்.

முதலாவது, "கசப்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் வார்த்தையைப்பற்றி சிந்திப்போம். இனியவை என்றதற்கு எதிர்பதமானதாக இவ்வார்த்தை இருக்கிறது. கசப்பு மிகுந்த ஒருவர் எதிர்மறையானவர்களும், வாழ்க்கையை பற்றி அவர்கள் கண்ணோட்டம் நம்பிக்கையற்றதாக இருக்கும். எந்த ஒரு காரியத்தை பற்றியும் அவர்கள் மகிழ்ச்சியோ, சந்தோஷமோ அடைவதில்லை. பிலி. 4 : 4 ல் தேவன் சொல்லியிருப்பதோடு இதை பொருத்திப்பாருங்கள் கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று அவர் நமக்கு கட்டளையிடுகிறார்.

இரண்டாவது வார்த்தை "கோபம்" கசப்பிலிருந்து வழிந்து வருகிறது ஒரு குணமாக இருக்கிறது. கோபம் என்பதை ஆத்திரம் அல்லது

கட்டுப்படுத்தப்படாத உணர்வின் வெளிப்பாடாக இருக்கிறது. யாக். 1:19ல் நானும், நீங்களும் "கேட்கிறதற்கு தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்" என்று தேவன் கட்டளையிடுகிறார்.

மூன்றாவது வார்த்தை "மூர்க்கம்" இவ்வார்த்தைக்கும் கோபம் என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தைக்கும் வேறுபாடு உண்டு. கோபம் என்பது தீடிர் என்று வெளிப்படும் ஒன்று, மூர்க்கம் மொழி என்று பெயர்க்கப்பட்ட வார்த்தைக்கு ஒருவனுடைய மனதில் தங்கி, அதில் குடிகொள்கிற ஒரு உணர்வு என்று பொருள். பழிவாங்குதல், என்று அர்த்தமும் இவ்வார்த்தைக்கு பொருந்தி வரும், நாம் ஏற்கனவே படித்தப்படி, இப்படிப்பட்ட கோபம் பாவமாக இருக்கிறது.

நான்காவதாக, "கூக்குரல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையை கவனிப்போம். கோபமாக இருக்கும் ஒருவனைப் பற்றி இது பேசுகிறது. கோபத்திலே பேசும் அவனுடைய சத்தம் அதிகமாகிக் கொண்டே போகிறது. இது ஒருவருக்கொருவர் விரோதமாக பேசுவதில் முடிகிறது. இப்படிப்பட்ட மொழிகள், நமக்கு பக்தி விருத்தியை உண்டாக்காது. தேவன் நாம் பக்தி விருத்தி உண்டாகும்படிதான் பேச வேண்டும் என்கிறார்.

ஐந்தாவதாக தேவனால் தடை செய்யப்பட்டது "தூஷணம்" இதற்கு பொல்லாங்காக பேசுதல் என்னும் பொருள்படும். மற்றவர்களைக் குறித்து தூஷித்து குற்றம் சுமத்திப் பேசுவதை குறிக்கிறது. மற்றவருடைய நற்பெயரை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இது செய்யப்படுகிறது. மற்றவரை பழி தீர்த்து கொள்ளுவதும் இதில் உள்ளடக்கம்.

ஆறாவது வார்த்தை "துர்க்குணம்" என்பதாகும். அதற்கு துன்மார்க்கம் என்று பொருள் தரத்தில் உள்ள தவறை இது சுட்டிகாட்டுகிறது. மற்றவர்களுக்கு தவறு நடக்க வேண்டும் என்று நினைப்பது தீமையாக மற்றவர்கள் மேல் வரட்டுமென எண்ணுவது அதுமாத்திரமல்ல, மற்றவர்கள் மேல் தீமையை வருவிப்பதற்கு இவன் தீவிரமாக செயல்படுவான். இந்த தன்மைகள் எல்லாம் தேவனை துக்கப்படுத்துவதினால் நீங்களும், நானும் நம்முடைய முழு பெலத்தோடு இவைகளுக்கு எதிர்த்து நிற்க வேண்டும்.

இதை செய்வதற்கு ஒரு வழி எபே. 4 : 32 ம் வசனத்தில் தேவன் சொல்லியிருப்பதற்கு கீழ்ப்படிவதாகும். கர்த்தருக்கு சித்தமானால், அதை குறித்து அடுத்த மாதத்தில் படிப்போம். அதுவரை தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதபடி நாம் ஒவ்வொரும் ஜாக்கிரதையாக கிரியை செய்வோமாக.

**J. PICKENS** **CHARLE DI PALMA**

# நீதியான நியாயத்தீர்ப்பு

**கர்த்தருடைய பந்தியில் அபாத்திரமாய் பங்கு பெறுகிறவர்கள் I கொரி 11 : 29**

இயேசு கிறிஸ்து தம்மை சிலுவையில் ஒப்புக் கொடுப்பதற்கு முன்பு, இராத்திரியில் சீஷர்களோடு இருக்கும் போது இராபோஜன பந்தியை ஏற்படுத்தினார். அவர் இதை ஏற்படுத்தும் போது சில காரியங்களை வலியுறுத்தினார். அது என்னவென்றால் அவர்கள் போஜனம் பண்ணுகையில் இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து அதைப் பிட்டு சீஷர்களுக்குக் கொடுத்து நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள். இது பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது (மத்.26:26-28) என்று இரட்சகராகிய இயேசு கிறிஸ்து கூறினார். இதற்கு பின்பு அப்போஸ்தலர் 2 அதிகாரத்தில் கிறிஸ்துவின் சபையானது எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்ட போது சுமார் 3000 பேர் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டார்கள் (அப்2:41, 47) இப்படி திருச்சபையில் சேர்க்கப்பட்டவர்கள் ஆராதனை எப்படி செய்தார்கள் என்பது குறித்து கூறும் போது "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப் 2 : 42) என்று இந்நூலின் ஆசிரியர் கூறுகிறார். ஆதி திருச்சபையார் தேவனை ஆராதிக்கக்கூடிய விசயத்தில் அப் 2 : 42ல் சொல்லப்பட்ட எல்லா காரியத்தையும் அவர்கள் செம்மையாக செய்திருக்கிறார்கள். அதில் முக்கியமானது கர்த்தருடைய பந்தி அதைக் குறித்து நாம் இப்போது சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

இன்று அநேக சபைகள் (பிரிவினை கூட்டங்கள்) எழும்பி கர்த்தருடைய பந்தியை குறித்து அக்கறையில்லாமல் மாதத்துக்கு ஒருமுறையோ அல்லது இருமுறையோ அல்லது வருடத்திற்கு ஒருமுறையோ இருமுறையோ அதில் பங்கு பெறுகிறார்கள். ஆனால் வசனம் தெளிந்த நீரோடையைப் போல தெளிவாக கூறுவதை இங்கே கவனியுங்கள். "வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில்" (அப் 20 : 7) என்று பரிசுத்த ஆவியானவர் இப்படிப்பட்டவர்களுக்கு தமது வசனத்தின் மூலம் சவுக்கடி கொடுக்கிறார்.

ஆதித் திருசபை மக்கள் ஒவ்வொரு வாரமும் (வாரத்தின் முதல் நாள்) கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்று இருக்கிறார்கள் என்று நாம் இந்த வசனத்தின் (அப் 20 : 7) மூலம் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும். அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்தில் இருக்கிற கிறிஸ்துவின் சபைகளுக்கு எழுதும் போது சில காரியங்களை வலியுறுத்தி எழுதுகிறார். **முதலாவது,** காரியம் கர்த்தருடைய பந்தியில் அப்பத்தை பிட்டு பங்கு பெறுகிற போதும், பாத்திரத்தில் (திராட்ச ரசம்) பானம் பண்ணும் போதும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நினைவு கூரவேண்டும். (I கொரி 11 : 21 – 25) இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும், மரணத்தையும் உணர்ந்து இதில் பங்கு பெற வேண்டும் என்கிறார்.

**இரண்டாவது;** கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை தெரிவிக்கிறீர்கள் (I கொரி 11 : 20) என்றும் கூறுகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து உயிர்த்தெழுந்து பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்து இருக்கிறார். அவர் மீண்டும் இந்த உலகத்தை நியாயந்தீர்க்க வரப்போகிறார் என்று நாம் இந்த பந்தியில் பங்கு பெறுவதின் மூலம் எல்லாருக்கும் உணர்த்துகிறோம். மூன்றாவது எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தை புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன் (I கொரி 11:28) என்றும் பவுல் எச்சரிக்கிறார்.

ஓர் உண்மை கிறிஸ்தவன் இந்த பந்தியில் பங்கு பெறுவதற்கு முன்பு "நான் இந்த பந்தியில் பங்கு பெறுவதற்கு பாத்திரவானாய் இருக்கிறேனா" என்று தன்னைத் தானே சோதித்துப் பார்த்த பின்பு இதில் பங்கு பெற வேண்டும். ஒருவேளை பாவம் செய்திருப்போமென்றால் தேவனிடத்திற்கு நேராக நம்முடைய இருதயத்தை திருப்பி, மனந்திரும்பி மனப்பூர்வமாக மன்னிப்பு கேட்டு இதில் பங்கு பெற வேண்டும். ஒருவன் இதன்படி செய்யாமல் ஏனோதானோவென்று இதில் பங்கு பெறுவானென்றால் நித்திய ஆக்கினை அவனுக்காக வைக்கப்பட்டிருக்கும்.

பவுல் கொரிந்து பட்டணத்தின் சபைகளுக்கு மேலும் கூறும் போது "என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜன பானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜன பானம் பண்ணுகிறான்" (I கொரி 11 : 29) என்கிறார். எனவே கிறிஸ்துவின் சபைக்குள்ளே இருப்பவர்கள் அபாத்திரமாய் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறாமல் எச்சரிக்கையாயிருப்போம். அப்படியில்லாமல், யாராவது அபாத்திரமாய் பந்தியில் பங்கு கொண்டால் அவர்களுடைய சரீரத்தையும் ஆத்துமாவையும் வாங்குவதற்கு நரகம் தன் வாயை திறந்து விழுங்குவதற்கு காத்துக் கொண்டு இருக்கிறது.

## V நாம் மனப்பூர்வமாய் பாவம் செய்கிறவர்களாயிருந்தால் (எபி 10 : 26)

நாம் உளையான பாவ சேற்றிலிருந்து மீட்டு எடுக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவின் திரு இரத்தத்தால் நாம் பாவம் அற கழுவப்பட்டிருக்கிறோம். ஆனாலும் ஒரு சிலர், சபைக்குள்ளே இருந்து தங்களுடைய பாவ வாழ்க்கையை மீண்டும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள். ஏனென்றால் சத்தியத்தை அவர்கள் அறிந்திருந்தாலும் அதற்கு செவி கொடுக்கவும், அதன்படி நடக்கவும் சாத்தான் அவர்களுடைய மனதை பாவ ஜீவியத்திற்கு இழுத்து அவர்களை விழ வைத்து கைகொட்டி ரசிக்கிறான். இப்படிப்பட்டவர்களைக் குறித்து எபிரெயர் ஆசிரியர் கூறும் போது "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப் பூர்வமாய்ப் பாவம் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தப்படும் வேறொரு பலி இனியிராமல் (எபி 10 : 26) என்று திட்டவட்டமாக எழுதுகிறார்.

நியாயப் பிரமாண காலத்தில் இஸ்ரவேலர்கள் பாவம் செய்கிறபோது ஆடுகளையோ, மாடுகளையோ பலி செலுத்துவார்கள். ஆனால் கிறிஸ்து இந்த பூமியில் ஜனனம் செய்து நம்முடைய பாவங்களுக்காக அவரே தம்மை பலியாக ஒப்புக் கொடுத்தார் ( 1 பேது 1 : 19) அவர் தம்மை சிலுவையில் ஒப்புக் கொடுத்ததின் மூலம் நியாயப் பிரமாணம் முழுவதும் முடிவுக்கு வந்தது (கொலோ 2 : 14-17) அதனால் தான் எபிரெயர் ஆசிரியர் இனிமேல் மனிதனுடைய பாவங்களை நிவர்த்தி செய்கிறதற்கு வேறொரு பலி இல்லை என்று கூறுகிறார். எனவே நாம் மனப்பூர்வமாய் பாவம் செய்தால் காளையையோ, ஆடுகளையோ, இனி நாம் பலி செலுத்த முடியாது. எனவே நாம் கிறிஸ்துவை அறிந்த பின்பு நாம் மனப் பூர்வமாய் பாவம் செய்கிற போது என்ன செய்கிறோம் என்று எபிரெயர் ஆசிரியர் எச்சரிப்பதை இந்த வசனப் பகுதியில் கவனியுங்கள் "தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து தன்னைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவனாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள் (எபி 10 : 20) என்று நம்மை பார்த்து கூறுகிறார். நாம் மனப்பூர்வமாய் பாவம் செய்தால் இயேசு கிறிஸ்துவின் குற்றமில்லாத இரத்தத்தை நாம் காலின் கீழ் போட்டு மிதித்து அதை அசுத்தம் என்கிறோம்.


மேலும் வசனம் கூறும் போது "மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே (எபி 10 : 28) என்று கூறுகிறார். மோசேயின் நியாயப் பிரமாணத்தில் ஒரு கட்டளையை மீறினாலும் அவன்

கொல்லப்படுகிறான். அந்த பிரமாணத்திற்கே அப்படிப்பட்ட தண்டனையென்றால் கிறிஸ்து தம்முடைய இரத்தத்தைக் கொடுத்து புதிய பிரமாணத்தை நமக்கு கொடுத்து இருக்கிறார். இந்த பிரமாணத்தை ஒருவன் தள்ளுகிற போது (மீறுகிற போது) அவன் எப்படிப்பட்டதான ஆக்கினைக்கு பாத்திரவானாயிருக்கிறான் என்பதை யோசித்து பாருங்கள் என்று சொல்லி, கிறிஸ்துவின் பிரமாணத்தை மீறுகிறவர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கிறார்.

ஆகையால், இந்த கட்டுரையை வாசிக்கிற பிரியமானவர்களே நாம் தேவனுடைய சபையை அறிந்து, அதில் விசுவாசிகளாயிருந்து கொண்டு நாம் மீண்டும் மீண்டும் பாவம் செய்வோம்' என்றால் நாம் மனந்திரும்ப வேண்டும். ஏனென்றால் அப்போஸ்தலனாகிய பேதுரு பேசுவதை சற்று கூர்ந்து கவனியுங்கள். "கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதா யிருக்கும், அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும், அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாய் இருக்கும் ( II பேது 2 : 20, 21) என்று சொல்கிறார்.

நாம் தேவனுடைய சபையில் இருந்து கொண்டு மனப்பூர்வமாய் பாவம் செய்வோமானால் இவ்வசனங்களின் எச்சரிப்பை புரிந்து கொண்டு பரிசுத்த வழியில் நம் இருதயங்களை திரும்புவோம். இல்லையென்றால் "நியாயத் தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும் (எபி 10 : 27) என்று வசனம் கூறுகிறது. சபைக்குள்ளே துணிகரமான பாவங்களை செய்து கொண்டு இருப்போமென்றால் மனந்திரும்புவோம். இல்லையென்றால் நரகத்திற்கு ஒப்புக் கொடுப்பதற்கு ஆயத்தமாவோம். "சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும் போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர் அவர் அப்படியே செய்வார் (I தெச 5 : 23 - 24) ஆமென்.


**பர்னபாஸ்.**
திருப்பூர்



# HEAR THE VOICE OF TRUTH

**ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 - 9.00 p.m.<br>9.00 - 9.15 p.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m. | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695 034 | P.K. Varghese |



***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WPP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Dell
Annual Subscription Rs. 30/

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த
வேதாகமத்தை முறையாகக் கற்றுக்
கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு
சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,
த.பெ.எண்-27, காங்கேயம்-638 701.
தமிழ்நாடு. இந்தியா.

Published by **Church of Christ, Kangayam**
Printed at Konar Printers, Madurai - 625 012. **Editor : S. Rajanayagam**